DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 64/2025 |
| Deposition of witness | : | P. W - 4 |
| Name | : | சந்தோஷ் |
| Father’s /Husband Name | : | கலியமூர்த்தி |
| Village | : | 3 கூத்தனுர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 20 |
| Occupation | : | பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 29th day May 2025.
Accused A2 present. A1 absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:-**

இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 29.10.2024 ம் தேதி காலை 07.30 மணிக்கு கண்ணாகுட்டி என்பவரின் வயலுக்கு கைடிராக்டரில் உழவு ஓட்டுவதற்காக நான் எடுத்துசென்றேன். அப்போது 1 வது எதிரி கண்ணன் எனது அம்மா அ.சா. 1 ஐ குச்சிகாரி, தேவுடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உனக்கு எத்தனை பேர் வந்தாலும் பத்தாது என்று அசிங்கமாக பேசினார். அதே நாள் காலை 09.30 மணிக்கு எனது தாயார் 1வது எதிரி கண்ணனிடம் ஏன் இவ்வாறு பேசுறிங்க என்று கேட்டபோது குச்சிகாரி, தேவுடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அப்போது நானும் எனது தம்பி வசீகரனும் அங்கிருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும்கட்டையால் எனது அம்மாவை தாக்க வந்தார்கள். அதை எனது தம்பி வசீகரன் தடுத்தபோது கண்ணன் கட்டையால் அடித்ததில் எனது தம்பியின் தலையில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. 2 வது எதிரி கௌரி கட்டையால் தலையின் இடது பக்கத்தில் அடித்ததில் காயம் ஏற்பட்டது. பிறகு கட்டையை காண்பித்து அடித்து கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதால் நாங்கள் வெளியில் இருந்தோம். காயம் பட்ட இருவரையும் நன்னிலம் அரசு

மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். இது சம்மந்தமாக பேரளம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.29 05:24:49 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 64/2025 |
| Deposition of witness | : | P.W - 5 |
| Name | : | குறள்வேந்தன் |
| Father’s /Husband Name | : | குருமூர்த்தி |
| Village | : | 3 கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 35 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 29th day May 2025.
Accused A2 present. A1 absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:-**

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை கடந்த 30.10.2024 ம் தேதி காலை 09.30 மணியளவில் 3 கூத்தனூர், தெற்கு தெருவில் 1 வது எதிரி கண்ணன் என்பவர் வீட்டு வாசலில் சந்தோஷ் மற்றும் கண்ணன் வீட்டிற்கிடையே நடந்த சண்டை தொடர்பாக பேரளம் போலிசார் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அப்போது நானும் ஜெயக்குமாரும் உடனிருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகசரிலுள்ள என்னுடைய 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ- 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.29 05:24:56 +0530